**O.S. No.190/2024**
**Date : 13.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 1 **திருமதி. லட்சுமி**

**குறுக்கு விசாரணை :**

1. நான் விவசாயம் செய்கிறேன். பஞ்சு மில் ஓட்டிக் கொண்டிருக்கிறேன். எனது தம்பியும், நானும் சேர்ந்து அந்தப் பஞ்சு மில்–ஐ நடத்தி வருகிறோம். எனது தம்பி பெயரில் அது சம்பந்தமான உரிமம் உள்ளது. மில்லில் வரும் வருமானத்தை நானும், எனது தம்பியும் சேர்ந்துதான் வருமான வரி கணக்கில் காட்டுவோம் என்றால் எனது தம்பி பெயரில் மட்டும் தான் அதை வருமானத்தில் காட்டுவோம். வெங்கடாசலபுரத்தில் விவசாய நிலம் உள்ளது அதை குத்தகைக்கு விவசாயம் செய்கிறேன், எனது பெயரில் சொந்தமாக நிலம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

2. எழுத்துப்பூர்வமாக குத்தகை ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை, வாய்மொழியாகத்தான் குத்தகை ஏற்படுத்திக் கொண்டோம். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எனது வருமானம் குறித்து கேள்வி கேட்பார்கள் என்ற பின்யோசனையின் காரணமாக தற்போது எனது சகோதரருடன் சேர்ந்து நான் மில் நடத்தி வருவதாகவும் குத்தகைக்கு நிலம் வைத்திருப்பதாகவும் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராதில் நான் மில் நடத்தி வந்ததாக சொல்லும் விவரமோ அல்லது குத்தகைக்கு நிலங்கள் வைத்து விவசாயம் செய்து வந்ததாக சொல்லும் விபரமோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. ஸ்ரீரங்கபுரம் சென்ட்ரல் வங்கி மற்றும் கூட்டுறவு வங்கி ஆகிய வங்கிகளில் நான் கணக்கு வைத்துள்ளேன். எனக்கு ஆண்டு வருமானம் என்பது ரூ.25000 வரை வரும். இது இல்லாமல் நான் வேறு ஏதேனும் தொழில் செய்கிறேனா என்றால் வட்டிக்கு பணம் கொடுக்கிறேன். ரூ.10 லட்சம், ரூ.5

லட்சம் ஆகிய தொகைகளை நான் வட்டிக்கு கொடுப்பேன். சுமார் பத்து நபர்களுக்கு நான் தற்போது வட்டிக்கு பணம் கொடுத்திருப்பேன். நான் இது சம்பந்தமாக வருமான வரி செலுத்துகிறேனா என்றால் நான் செலுத்துவது கிடையாது. அரசின் உரிய அனுமதி பெறாமல் கந்து வட்டி கொடுப்பது தவறு என்றால் சரியல்ல, நான் கந்துவட்டி கொடுப்பது கிடையாது.

4. 1996 ஆம் ஆண்டு எனது தந்தை இருக்கும்போது அவர் சொத்தை விற்று எனக்கு ரூ.5 லட்சம் பணம் கொடுத்தார். 2011 ஆம் ஆண்டு எனது அப்பாவின் வயல் காட்டை நாங்கள் விற்றபோது எனக்கு ரூ.4 லட்சம் பணம் கிடைத்தது. 2021 ஆம் ஆண்டு எனது அண்ணன் தனது நிலங்களை விற்றபோது எனது பங்கு என்று ரூ.20 லட்சம் பணம் கொடுத்தார். பணம் கொடுத்தது தொடர்பாக பாகப்பிரிவினை பத்திரம் எழுதும் எழுதிக்கொண்டோமா என்றால் வாய்மொழியாக மட்டுமே பேசிக்கொண்டோம், ஆவணங்கள் எதுவும் எழுதவில்லை.

5. எனது அப்பா விற்பனை செய்த கிரைய ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய முடியும். எனது பெற்றோர்கள் பெயர் குருவம்மாள், நாராயணசாமி. எனது உடன்பிறந்தவர்கள் கங்காதேவி, ராமசாமி சேது ராஜன், ராமலக்ஷ்மி மற்றும் நான். எங்களுக்கு குன்னூர், தப்புக்குண்டு, தாடிச்சேரி கோவிந்நகரம் ஆகிய இடங்களில் சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அதில் மொத்தம் மூன்று விவசாய நிலங்களும், இரண்டு வீடுகளும் இருந்தது என்றால் சரியல்ல. ஒரு வீடு மட்டுமே இருந்தது.

6. மேற்கண்ட சொத்துக்களை விற்பனை செய்தது எனது தந்தை எனக்கு பணம் கொடுத்ததாகவும், எனது சகோதரர் எனக்கு பணம் கொடுத்ததாகவும் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். எனது சகோதரன் திரு.சேதுராஜன் என்பவர் தேனி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.491/2006 எங்கள் குடும்ப சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்து அது இன்றளவில்

நிலுவையில் உள்ளதென்றால் சரிதான், நானும் அந்த வழக்கில் தரப்பினர் என்றால் சரிதான்.

7. அசல் வழக்கு எண். 112/2018 என்ற பாகப்பிரிவினை கோரிய வழக்கு எனது சகோதரி ராமலக்ஷ்மி என்பவர் தேனி சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி எனக்கு எதிராகவும் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராகவும் தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் கூறுவது பொய் என்றும், பூர்வீக சொத்துக்கள் விற்று எனக்கு பாகம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கின் பிரதிவாதியான கிருஷ்ணவேணி எனக்கு 2017–ம் ஆண்டு முதல் பழக்கம். அவர் என்ன படித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ரேஷன் கடையில் அவர் உப்பார் பட்டியில் பில் போடும் வேலை செய்து வருகிறார். பிரதிவாதியின் கணவர் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். அவருக்கு சொந்தமான வீடு, நிலங்கள் உள்ளதென்றால் வீடு மட்டும் உள்ளது. அவர் ஓரளவு வசதியானவர் என்றால் சரியல்ல, வீடு மட்டுமே உள்ளது. பிரதிவாதியின் கணவர் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று இறக்கும் வரை பெரியகுளம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான், அதன் பிறகு இறந்துவிட்டார்.

9. கடந்த 01.09.2022–ம் தேதியன்று என்னிடம் பணம் கேட்டார். நான் 10.09.2022–ம் தேதி என்று பணம் கொடுத்தேன். வீசிபுரத்தைச் சார்ந்த கண்ணன் என்பவர் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்தார், அந்த சமயத்தில் தான் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார். எனவே அந்த பணத்தை அவரிடம் கொடுத்தேன். ரூ. 15 லட்சம் நான் கண்ணனிடம் கொடுத்திருந்தேன், அவர் எனக்கு ரூ.10 லட்சம் திருப்பி செலுத்தி இருந்தார். எனது அண்ணனின் பணத்தை நான் அவரிடம் வட்டிக்கு பணம் வரும் என்று அவரிடம் கொடுத்திருந்தேன். அந்தப் பணத்தை தான் எனக்கு ரூ.10 லட்சம் கொடுத்தார்.

10. இந்த விபரங்கள் எதையும் நான் தாக்கல் செய்த வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் நான், கிருஷ்ணசாமி, பாலமுருகன், மணிவண்ணன், சக்திவேல் ஆகியோர்கள் இருந்தோம். சாட்சி கிருஷ்ணசாமி என்பவர் கோபாலபுரத்தைச் சார்ந்தவர் என்றால் சரிதான். கோபாலபுரத்திற்கும், ஸ்ரீரங்கபுரத்திற்கும் இடையில் உள்ள தூரம் சுமார் 2-3 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

11. பிரதிவாதிகள் வருவதற்கு முன்பே சாட்சிகள் வந்தார்களா என்றால் பாலமுருகன் முதலில் வந்தார், கிருஷ்ணசாமி அதற்கு பிறகு கொஞ்சம் லேட் ஆக வந்தார். மணிவண்ணன், சக்திவேல் ஆகியோர்கள் எப்போது வந்தார்கள் என்றால் மணிவண்ணன் முன்னாலேயே வந்துவிட்டார், சக்திவேலை பிரதிவாதி அழைத்து வந்தார். பிரதிவாதி என்ன காரணத்திற்காக பணம் வேண்டும் என கேட்டார் என்ற விவரத்தை சாட்சிகளிடம் தெரிவித்தார்.

12. குடும்ப செலவு மற்றும் சில்லறை கடன்களை தீர்ப்பதற்காக பணம் வேண்டும் என கேட்டு இருந்தார். பிரதிவாதி கடன் வேண்டுமென கேட்ட தேதியில் அவரது கணவர் பெரியகுளம் காவல் நிலையத்தில் போலீசாக வேலை பார்த்தார் என்றால் சரிதான். பத்து லட்ச ரூபாய் பணம் கேட்டதற்கு புரோநோட் தவிர வேறு எந்த ஆவணமும் கேட்டேனா என்றால் அவ்வாறு வேறு எதுவும் கேட்கவில்லை. செக் கேட்டேன், அவர் செக் பேங்கிலிருந்து வரவில்லை என தெரிவித்துவிட்டார்.

13. இந்த விபரங்களை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி புரோநோட் எழுதி கொடுத்த பிறகு நான் அதை வாங்கி பார்த்தேன் அதில் தொகை, தேதி, விலாசம் ஆகியவை சரியாக இருந்தது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்க கூடிய வா.த.சா.ஆ.1- புரோநோட்டில் மேலே ரூ.10 லட்சம் என்பதற்கு பதிலாக, 1-க்கு பக்கத்தில் தான் கமா போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தொகைக்குப் பின்னால் இரண்டு பூஜ்ஜியங்கள் தனியாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பெயர் இந்த

புரோநோட்டில் கிருட்ணவேணி என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கிருஷ்ணவேணி என்று தான் நான் சொன்னேன்.

14. புரோநோட்டில் கிட்ணவேணி என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றும், வேண்டுமென்றே இல்லை என குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எனது பெயர் லட்சுமியம்மாள் என்றும் லட்சுமி என்று மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் வேண்டுமென்றே லட்சுமியம்மாள் என்று நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பில் லட்சுமி என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புரோநோட் எழுதிய நபரும், சாட்சி கையெழுத்து போட்ட நபரின் பேனாவும் வெவ்வேறு இங்கால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவர் அவர்கள் பேனாவில் கையெழுத்து போட்டு உள்ளார்கள்.

15. புரோநோட்டில் உள்ள பிரதிவாதிகளின் கையெழுத்திற்கும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்துக்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள பிரதிவாதியின் சகோதரி தான் அசல் வழக்கில் 191/2024 வழக்கின் 2ம் பிரதிவாதி பிரேமா என்ற விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்குகளிலும் அவர்கள் சகோதரிகள் என்ற விபரத்தை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

16. பிரதிவாதிகள் ஒரு தடவை கூட வட்டி செலுத்தினார்கள் என்ற விபரத்தை நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகாரோ ஊரில் பஞ்சாயத்து செய்தோமா என்றால் ஊரில் பஞ்சாயத்து செய்தோம். 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மணிவண்ணன் வீட்டிற்கு பிரதிவாதி தான் பஞ்சாயத்திற்கு வந்தார். பணம் கேட்டதற்கு ஆகஸ்டில் பணம் செலுத்தி முடிப்பதாக தெரிவித்து விட்டு சென்றார்கள்

முன்பணம் எதுவும் செலுத்தவில்லை, வட்டி மட்டும் செலுத்தினார்கள். ரூ. 18,000/– செலுத்தினார்கள். வங்கிக் கணக்கில் அந்த தொகை போடப்பட்டது.

17. அது சம்பந்தமாக புரோநோட்டின் பின்னால் எதுவும் வரவு வைக்கவில்லை என்றால் சரிதான். வட்டிக்கு பணம் கொடுத்த விபரத்தையும் வழக்கறிஞரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிலும் வட்டி கொடுத்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்து வந்தார் என்ற விபரத்தை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் படித்துப் பார்த்தேன். வாதி யார் என்று தனக்கு தெரியாது என்று பிரதிவாதி கட்சி எடுத்துள்ளார். வேறென்ன கட்சி குறிப்பிட்டு எடுத்துள்ளார் என்று எனக்கு தெரியாது.

18. நான் தாக்கல் செய்துள்ள புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்தல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கையெழுத்துக்களை நான் ஊர்ஜிதம் செய்வதற்கு தடய அறிவியல் ஆய்வகத்தில் நான் அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் பிரதிவாதிகள் தான் தங்கள் கையெழுத்து இல்லை என தெரிவிக்கிறார்கள் என்பதால், அவர்கள் தான் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும். நான் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற பட்சத்தில் நான் தான் கையெழுத்தை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

19. அசல் வழக்கு எண். 191/2024 வழக்கில் பிரேமா பணப் பரிவர்த்தனை தொடர்பாக பஞ்சாயத்து நடைபெற்றபோது அவருக்கு சாதகமாக கிருஷ்ணவேணி இந்த வழக்கின் பிரதிவாதி வந்த காரணத்தினால் அங்கு நடைபெற்ற வாக்குவாதத்தின் காரணமாக பிரதிவாதிக்கு எதிராக நான் இந்த புரோநோட்டை மோசடியாக தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்னவாறு பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், தாவா புரோநோட் ஏதும் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா புரேநோட்டு உண்மை தன்மை வாய்ந்த

ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.13 17:38:29 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.